# கோணல்களில் கூனல்கள்

ஹியூமேன் அபிமானி
HUMANE ABIMANI

**AVINI Publications**
# 60, Rajagopalasamy Nagar
Post Box No : 46
Mannargudi, Tamilnadu - 614 001
**Mobile : 98941 92072**
email : avinipublications@hotmail.com

© All rights reserved with the Author
First Edition - March 2007

**Price Rs. 50/-**

Printed at : Sri Janakiraman Offset Printers
# 69, Mir Bakshi Ali St, Royapettah, Chennai - 14.
tel : 2848 2612 / 4356 7512.

# முகவுரை:

இச்சமுதாயத்தில் மலிந்து கிடக்கிற கோணங்கித்தனங்களைச் சுட்டிக்காட்டி தேவையானத் திருத்தங்களைப் பெறும் நோக்கில் இந்நூலின் தலைப்பு உருவாக்கப்பெற்றது. கண்மூடித்தனமாக, கிடைக்கப்பெறும் அனைத்தையும் அள்ளிக்கொள்வதில் நம் மனித தோழர், தேழியர்களிடையே அளவிடமுடியா அளவு ஆர்வம் தழைத்தோங்கி நிற்கிறது. உலகில் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பவை களில் மிதமிஞ்சிய தீமைகள் அபரிதமாய் இருந்தும் மக்கள் கூட்டம் அவைகளை ஆனந்தத்துடன் அள்ளிப் பருகிக்கொண்டு இருக்கிறது.

தலைமுதல் வால்வரை, அரசுகள் முதல் ஆண்டிகள் வரை தேவையற்றவைகளைச் செய்வதில் போட்டி போட்டுக்கொண்டு கூத்தாடிப் பேரானந்தம் அடைவது மாதிரியான நிலைமை நிலவுவது மிகுந்த வேதனையளிக்கிறது.

பழங்காலந்தொட்டே, வாழ்வியல் நியதிகளை வடிவமைத்துக் கொடுத்தவர்களில் நல்லவர்களுடன் தீயவர்களும், இரண்டும் கலந்தவர்களும் இருந்து, தொடர்ந்து வந்தவண்ணமும் உள்ளனர். தெரிந்தோ, தெரியாமலோ அல்லது அரைகுறையாக இரண்டும் கலந்தோ மிகத் தேவையற்றவைகளுக்காக மனிதக் கூட்டங்கள் அதிகம் அலைமோதுகின்றன.

மானுட வாழ்க்கையின் உலகியல் நிலைகளை, தேவையானவை, தேவையற்றவை என்ற இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி ஆராய்ந்தால் பல கோணல்தனங்களும், கூனல் தனங்களும் அகன்றுவிடும் வாய்ப்பு வந்தேறும். இந்நிலைக்காக தேவையானவைகளை மூன்று உட்பிரிவுகளாக

மிகமிக அவசியம், மிக அவசியம், (சாதாரண) அவசியம் என்றும் அவ்வண்ணமே தேவையற்றவைகளையும் மூன்று வகைகளில் உணர்ந்து உற்றுநோக்கினால் பல விளக்கங்கள் கிடைக்கின்றன. இவற்றை எவரிடமும் திணிக்க முயலாமல் அவரவர் விருப்பத்திற்கு விட்டு விடலாம். இருப்பினும் பெரும்பாலான மக்கள் தெளியும் நிலைப் பாட்டில், கிட்டத்தட்ட ஒத்தக்கருத்துகள், கொள்கைகள் நிலவும் தன்மை ஏற்படலாம்.

தேவையானவைகளைப் பாகுபடுத்த தனிமனிதன் தன் விருப்பு வெறுப்புகளுக்கேற்பக் கைக்கொள்ளும் சுதந்திரமுண்டு. தேவையற்றவைகள் எனும்போது மிகமிக, மிகத் தேவையற்றவை களை முறையே வரிசைக்கிரமத்தில் ஒதுக்கித்தள்ளி, ஒருவேளை பலவிதக் கட்டாயச் சூழ்நிலைகளினால் சாதாரணநிலை தேவையற்றவைகளை பயன்பாட்டில் கைக்கொண்டால்கூட இவ்வுலக வாழ்வில் வீண் பிரச்சினைகள், அனாவசியப் போட்டிகள் ஏற்பட வாய்ப்புகள் குறைகின்றன.

சுத்தமானக் குடிநீர், உடல் நலம், உள்ள நலம், வாழ்வதற்கேற்ற வருமானம், சத்துணவு, சராசரி வாழுமிடம் மற்றும் ஆடைகள், உடலுழைப்பு, முறையானக் காமம், கல்வியறிவு, இயற்கையின் வரப்பிரசாதங்களான தாவரங்கள், கால்நடைகள், மழை, நல்ல சுற்றுப்புறம், அளவான மனமகிழ்வுச் செயல்கள் போன்றவைகளை அவரவர் தேவைகளில் சுயவிருப்பத்தில் எந்த வரிசைக்கிரமத்திலும் வைத்துப்பார்த்துக் கொள்ளலாம்.

தேவையற்றவைப்பற்றி ஆயும் நிலையில் பின்வருபனவற்றில் பல சங்கதிகள் இல்லாமலேயே மனிதன் நிம்மதியாக, ஆரோக்கியமாக, மகிழ்வுடன் இயற்கையாக வாழமுடியும் என்பது உண்மை.

இருப்பினும் இவைகளே, இன்று மலிந்து கிடப்பதோடு மட்டுமல்லாமல், துரதிருஷ்டவசமாக, அரசுகள், ஆளுமைப்

பெற்றவர்கள் போன்ற முக்கியவகையினரே இவைகளுக்கு ஆதரவளித்து ஒவ்வொரு கணமும் அபிவிருத்தி செய்யப்பட்டு பூதாகர அளவில் மக்களிடம் வாரிவழங்கித் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அனைவருமே ஒருவித போதை மயக்கத்தில் தள்ளப்பட்டு, அவரவர் தன்னிலை உணர இயலா மனநிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டனர்.

ஆபத்தான போதைகள், விபச்சாரம், அதிகபட்சப் பொழுதுபோக்கு சங்கதிகள் மற்றும் விளையாட்டுக் கொண்டாட்டங்கள், அத்துறையினர்களுக்கு மிக மிகுந்த முக்கியங்கள், சில அற்புத இசைகளைத்தவிர பலரின் இசைக்கொலைகள்; தேவையற்றக் கண்டுபிடிப்புகள், பொருட்கள், போட்டிகள், போர்கள், செயற்கை முறைகளில் அதிக ஆர்வம், உடல்வலு மற்றும் ஆரோக்கியத்தை இழக்கவைக்கும் வாழ்வு முறைகள் போன்ற ஏராளமான ஆபத்து அஸ்திரங்கள் நித்தமும் அரங்கேறிக் கொண்டிருப்பது எங்குபோய் முடியுமோ? தெரியவில்லை.

ஒவ்வொரு காலகட்டத்தில் வாழும் மனிதர்கள் தாங்கள் செய்யும் தவறுகளை தங்கள் காலத்தில் அறிய இயலாநிலையே எக்காலமும் நிலவி வருகிறது. அதன்பிறகு தோன்றும் மக்கள், முன்மக்களின் மூடத்தனங்களைக் குறைகூறுவது வாடிக்கை வாழ்க்கையாகிவிட்டது. அதாவது அம்மணங்களை இலைப்பட்டையால் மூடியவர்களும், பின்னவர்களை கோவணங்களும், கோவணத்தானை துணி சுற்றியவனும், துணி-யனை தைத்து உடுத்தியவனும் பரிகாசம் செய்திருப்பார்கள். அதுபோலவே இன்று இங்குள்ள கிறுக்குத்தனங்கள் பின்னாளைய அறிவு மேம்பட்ட மனித வர்க்கத்தினரால் எள்ளி நகையாடப்படலாம்.

இருப்பினும், இதற்கு வாய்ப்பில்லாதது போல், இன்று நன்றாக அழகாக தைத்து உடுத்தியவர்களை, ஆங்காங்கே ஓட்டைகள், செயற்கை கிழிசல்கள் கொண்ட உடுத்தல்களை உடுத்தியவர்கள்

ஏளனமாகப் பார்க்கும் நிலை ஆரம்பமாகியிருக்கிறது. இது பின்நோக்கிச் செல்லும் நிலை ஆரம்பமாகி, அம்மணத்தில், பச்சை நரமாமிசம் தின்னும் நிலைவரை கொண்டு போகுமோ! என்ற அச்சம் ஏற்படுத்துகிறது.

மனித, உயிரின வாழ்வியல் பரிணாமத்தில் பல நிகழ்வுகள், பழக்க வழக்கங்கள் மாறிக்கொண்டே வந்து கொண்டிருப்பதை எவரும் மறுக்க இயலாது. அவ்வாறே இன்று மனித வாழ்வில் பரவலாகக் காணப்படுகின்ற கோணல்கள், அவற்றின் கூனல்தனங்கள் பிற்கால மக்களால் புறக்கணிக்கப்படலாம்.

எனவே, தேவையானவற்றை மட்டும் தேர்வு செய்து வழக்கத்தில் கொண்டு செல்வதே அறிவுநிலை மேம்பாட்டிற்கு ஆதாரமாகும். பொழுது போக்கு, உல்லாசம், கொண்டாட்டம், களியாட்டம் போன்றவைகளை முக்கிய உணவாகக் கொள்ளாமல் துணை உணவாக மட்டுமே கொண்டால், முன்னேற்றங்களை, பெரியவர்கள் சிலர் கூறிக்கொண்டிருக்கும் கால அளவு வரை கூட காத்திருக்காமல் முன்னமேயே அடைந்துவிட முடியுமென்பது உறுதி.

இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து அன்பர்களுக்கும் நூலாசிரியர் தன் நெஞ்சார்ந்த நன்றியை அன்புடன் உரித்தாக்குகிறார்.

**ஆசிரியர்**

குறிப்பு : இந்நூலின் கருத்துக்கள் அனைத்துத் தரப்பு வாசகர்களையும் எளிதாகச் சென்றடையவேண்டும் என்ற நோக்கில் இங்கு பேச்சுவழக்கு மொழிநடை பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, இருக்கின்றனர், கூறுகின்றனர் என்பதற்குப் பதிலாக முறையே இருக்கிறார்கள் எனவும், கூறப்படுகிறது என்பதற்கு சொல்லப்படுகிறது எனவும், அத்துடன் பிறமொழி சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்


பக்கம்

1. இன்றைய மனித உறவுகள் 1
2. பிறரை வேற்றுமையாக எண்ணாதீர்கள் 34
3. சினிமா 40
4. சினிமாக்காரர்கள் 50
5. மது 56
6. விபச்சாரம் 67
7. கட்டப்பஞ்சாயத்து 75
8. பன்முகநிலை வர்த்தகம் 85
9. திறந்தவெளிக் கழிப்பு 89
10. நகரங்களில் இயற்கை உபாதைகள் 94
11. சாலைக் கோவில்கள் 104
12. இடப் பற்றாக்குறை கடைகள் 110
13. வேண்டவே வேண்டாம் தெரு நாய்கள் 116
14. மனிதபிணம் 122
15. சாதி மதம் 128

பக்கம்

16. பதவி உயர்வில் இட ஒதுக்கீடு 133
17. பிச்சைக்காரர்கள் 138
18. சுவர் தாவரங்கள் 146
19. அழுக்கு உணவகங்கள் 151
20. வேறுபாடான சமையலும் உணவும் 154
21. டீ , காபி கலாச்சாரம் 165
22. இனிப்பு + காரம் = கோரம் 174
23. கொத்து புரோட்டா – கத்தும் புரோட்டா 182
24. பயணங்களில் 187
25. பேருந்துப் போட்டிகள் 191
26. காப்பி அடிப்பு படிப்பு 194
27. தேவையற்ற பொருட்கள் 201
28. தற்காலிகங்கள் நிரந்தரங்கள் 207
29. மஞ்சள் நீராட்டு 211
30. உபரி சேர்க்கைகள் 217